# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | |
|---|---|---|
| Case No | : | STC.No.1150/2016 |
| Deposition of Witness for | : | P.W.2 |
| Name | : | செந்தில்ராஜா (மேலாளர், ஆக்சிஸ் வங்கி , சேலம்கிளை) |
| Father/Husband Name | : | நடேசன் |
| Village | : | சேலம் |
| Taluk | : | சேலம் |
| Caste | : | BC |
| Calling | : | ஆக்சிஸ் வங்கி, மேலாளர் |
| Religion | : | இந்து |
| Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 17.03.2022.

<u>17.03.2022 – முதல் விசாரணை :</u>

நான் தற்போது ஆக்சிஸ்வங்கி, சேலம் மெயின்கிளையில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பானையின்பேரில் நான் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணமான காசோலை எங்களது வங்கியிலிருந்து எதிரி ராஜேஷ் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காசோலை வங்கியில் பணமாக்க செலுத்ததப்பட்டபோது 04.10.2016 -ம் தேதியிட்ட ரிட்டன்மெமோமூலம் Stop by drawer என காரணம் கூறி திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

<u>குறுக்குவிசாரணை</u>-எதிரிதரப்பில்

நீதிமன்ற அழைப்பானையின்பேரில் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் வங்கியில் சீனியர் மேனேஜராக பணிபுரிந்து வருகிறேன். அழைப்பானையில் எந்த கணக்கு தொடர்பாக சாட்சியம் அளிக்கவேண்டுமென குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். காசோலை எண் அழைப்பானையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் காசோலை வசூலுக்கு செலுத்தியதேதி மற்றும் திருப்பப்பட்டதேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2021 ஜீன் மாதம் முதல் நான் சேலம், மெயின்கிளை ஆக்சிஸ் வங்கியில் மேனேஜராக பணிபுரிந்துவருகிறேன். காசோலை வசூலுக்கு செலுத்திய தேதியான 04.10.2016 -ம் தேதி நான் மேற்படி வங்கிகிளையில் பணியில் இல்லை என்றால் சரிதான். அழைப்பானை பெற்றப்பட்டதற்கு பின்னிட்டு காசோலை குறித்தும், அதன் கணக்காளர் குறித்தும் பரிசோதித்து தெரிந்துகொண்டேன். காசோலைக்கு உண்டான கணக்கு விவரத்தை

பரிசோதித்தால்தான் காசோலை பணமாக்க செலுத்தப்பட்டவிவரம் தெரியவரும் என்றால் சரிதான். காசோலைக்கு உண்டான கணக்கு எண் தற்போது நடைமுறையில் உள்ளதா என்பது குறித்து வங்கி ஆவணங்களை பார்த்தால்தான் சொல்லமுடியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணமான ரிட்டன்மெமோ நான் வழங்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு காசோலை என்னகாரணத்திற்காக பணமாக்காமல் நிறுத்தப்பட்டது என்ற காணரத்தை நான் பார்த்துதெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். நீதிமன்றம் உத்தரவிடும் பட்சத்தில் அதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல்செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன்.

மறுவிசாரணை-இல்லை.

Sd/-Senthilraja

Sd/-T.Sundarrajan, 17.03.2022
Judicial Magistrate No.I, Sankari.